தொழிலாளர்களுக்கு மேல் அதிகமாக வசிப்பதால் அங்கு ஒரு மருத்துவமனை அமைத்துத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தூத்துக்குடியிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. இது தூத்துக்குடி நகரத்திற்குள்ளே இருந்தால் இந்த மருத்துவமனையையே பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இன்றைய தினம் 24 டாக்டர்களே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக வளர்ந்து வருகின்ற தூத்துக்குடி நகரத்தைச் சார்ந்த பொதுமக்கள் சிகிச்சை பெறுவதற்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே காலியான பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போதிய அளவிற்கு மருத்துவர்கள் இருப்பதாகத் தான் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு மருத்துவர்கள் தேவையோ அந்த அளவிற்கு அங்கே நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். காலியிடங்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தகவல் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி ஆய்வு செய்து, ஒரு சில அதிகாரிகளைக் கேட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 28, திரு. கே. தவசி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

28—

ஆண்டிபட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை அமைத்தல்

* **22708**—திரு. கே. தவசி :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிபட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிபட்டியானது மதுரை புறநகர்ப் பகுதியின் மத்தியிலே அமைந்திருக்கின்ற ஒரு ஊராகும். இது தாலுக்கா அந்தஸ்து பெற்றிருக்கிறது. மாவட்டத்திலே இது நேஷனல் ஹைவேசை சார்ந்திருக்கிறது. இதன் பெரும் பகுதி, மதுரை மாவட்டத்திலே புறநகர்ப் பகுதியிலே அதிகமான வாகனங்களை பி.ஆர்.சி. மற்றும் ஆர்.எம்.டி.சி. இயக்கிக் கொண்டிருக்கிற பகுதியாகும். எனவே, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, பணிமனை அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேனி பகுதியில் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த நலப் பணித் திட்டங்களுக்காக வருகைத் தருகின்றபோது, அந்தப் பகுதியிலே தேனி, உசிலம்பட்டி போன்ற பகுதிகளில் புதியதாக பணிமனைகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, இன்றைக்கு பணிமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே ஆண்டிபட்டி இதற்கு மத்தியிலே இருக்கிற காரணத்தால், அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னேன். ஆகவே மீண்டும் அரசு இதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 29, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

29—

புதிய போக்குவரத்துக் கழகம் அமைத்தல்

* **34340**—திரு. ஆ. செல்லதுரை :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைத் தனியாகப் பிரித்து புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?